<u>4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 97/2022**
**நாள்: 14.08.2024** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலுச்சாமி | தொழில் | : ஓர்க்ஷாப் |
| த/பெ | : மயில்சாமி | கிராமம் | : கொடுங்கியம் |
| வயது | : 40 | தாலுகா | : உடுமலைப்பேட்டை |
| ஜாதி | : | மாவட்டம் | : திருப்பூர். |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2 ஆம் வாதி எனது மனைவி. பிரதிவாதி சிவக்குமார் வீடும் எனது வீடும் பக்கம்பக்கத்துவீடு. எனக்கு 2018 லிருந்து சிவக்குமாரை தெரியும். பிரதிவாதிக்கு என்ன தொழில் என்றால் ஆட்டோ ஒட்டுநர். பிரதிவாதி மனநிலை சரியில்லாமலும், உடல் நிலைய சரியில்லாமலும் ஆட்டோ ஒட்டாமல் இருந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி மனநிலை சரியில்லாத காரணத்தால் அதற்காக கோயமுத்தூர் சாரல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவாவில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் கிரையம்செய்து கொடுக்க வேண்டும் மற்றும் மாற்றுப்பரிகாரமாக கிரைய முன்பணத்தை வட்டியுடன் கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளேன். பிரதிவாதி கிரைய முன்தொகை ரூ.12,95,000/-மும் அத்தொகைக்கு கிரைய ஒப்பந்த தேதிமுதல் தொகை வசூல் ஆகும் தேதிவரை 12 சதவீதம் வட்டியுடன் திருப்பி செலுத்த தயாராக இருக்கும்பட்சத்தில் அதை நான் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேனா என்றால் அதனை நான் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். அவ்வாறு பிரதிவாதி தொகையை வட்டியுடன் செலுத்த தயாராக இருக்கும்பட்சத்தில் பிரதிவாதி எனக்கு சொத்தை கிரையம் எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரிதான். சொத்தின் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் உள்ளதால் பிரதிவாதி சொத்துக்களை அடமானம் வைத்தோ, கடன் பெற்றோ அல்லது வேறு நபர்களுக்கு விற்றோ எனக்கு செலுத்த வேண்டிய தொகை திருப்பி கொடுக்க தயாராக உள்ளார் என்றால் அதற்கு நான் தயாராக இல்லை. தாவா சொத்து 5 1/2 சென்ட். தாவா சொத்தில் டார்சுகட்டிடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது எவ்வளவு

மதிப்பு பெறும் என்றால் ஏற்கனவே நாங்கள் பேசியதை விட சுமார் ரூ13 லட்சத்திற்கு மதிப்பு பெறும். தாவா சொத்து தற்போது ரூ.50 லட்சம் மதிப்பு பெறும் என்றால் சரியல்ல. அம்மச்சிகவுண்டனூர் ஐயப்பன் கோவலில் ஒரு பூசாரி மூலமாக தாவா சொத்தை விலைக்கு பேசினோம். அவர் சுப்பிரமணி என சாட்சியாக கையொப்பம் செய்தார். இடம் சம்மந்தமாக பேசும்போது பிரதிவாதி, பிரதிவாதியின் மனைவி மற்றும் பூசாரி ஆகியோர்கள் இருந்தார்கள். கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கிரையம் பற்றி பேசினோம். கிரையம் ரூ.15 லட்சம் பேசப்பட்டு கிரைய முன் தொகை ரூ.12,95,000/- கொடுக்கப்பட்டது. கிரயைம் பற்றி பேசியபோது முதலில் நான் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ.6 லட்சம் கொடுத்தேன். ரூ.6 லட்சம் கொடுத்த அன்று கிரைய உடன்படிக்கை எழுதப்படவில்லை. 14.12.2021 அன்று DD மூலமாக ரூ.6,78,000/- கொடுத்தேன். முத்தூட் பைனான்சில் பிரதிவாதிக்கு இருந்த கடனை திருப்பி செலுத்த சொத்துவாணத்தை திரும்ப பெறுவதற்காக நான் அந்த தொகையை கொடுத்தேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படியும் சாட்சியின் ஒப்புதலின்படியும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஒம்/-திரு.V.ஜான்மினோ,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.